# வர்த்தகம் மூலதனம்

ஜே.ஜே

## மீண்டும் வாக்குரிமையைப் பெற்ற சிம்பாவே

சர்வதேச நாணய நிதியம் ஏழு ஆண்டுகள் இடைநிறுத்தத்திற்குப் பின்னர் சிம்பாவேயிற்கு வாக்களிக்கும் உரிமையை அளித்துள்ளது. 2003ம் ஆண்டு அதிபர் றொபேர்ட் முகாபே தலைமையிலான அரசு சர்வதேச நாணய நிதியத்திற்கு கொடுக்கவேண்டிய கடனை மீளளிக்காததனால் வாக்களிக்கும் உரிமை இடைநிறுத்தப்பட்டிருந்தது. வாக்களிக்கும் உரிமையை பெற்றிருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்ற 1.3 பில்லியன் டொலரினை மீளக் கொடுக்கும்வரை, கடன் எதுவும் பெறும் உரிமை இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அதே சமயம் முடிவுகளை மேற்கொள்ளும் பணியினை மேற்கொள்ள முடியும். வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டதன் மூலம் சிம்பாவே தமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், கொடையாளி நாடுகளுடனான உறவினை வளர்ப்பதற்கும் முயற்சிக்க முடியும். பொருளாதாரச் சீர்குலைவினால் நாடு பெரும் வீழ்ச்சிக்கு சென்று கொண்டிருந்த நிலையில் வெளிநாட்டு நாணயங்களின் பாவனைக்கு அனுமதி உட்பட பல சீர்திருத்தங்களிற்கு உறுதிமொழி அளிக்கப்பட்டதனால் முகாபே தலைமையிலான அரசுடன் இணைந்து செயல்பட, ஜனநாயக மாற்றத்திற்கான கட்சியின் தலைவர் மோர்கன் தஷ்வன்கிரி பிரதமர் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டிருந்தார்.



சர்வதேச நாணய நிதியத்தின் தளர்வினை நாட்டின் வளர்ச்சிக்கு சாதகமாக்க அதிபர் முயலவேண்டும் என்பதுடன், சட்டமா அதிபர், மத்தியவங்கி ஆளுனர் ஆகியோரை மாற்றி உறுதியளிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த பிரதமர் தலைமையிலான எதிர்க்கட்சியினர் முப்பதுநாள் கால அவகாசம் அளித்துள்ளனர். ஒரு வருடம் காத்திருந்தவர்கள் பொறுமையிழந்த நிலையிலேயே ஒருமாத அவகாசம் என்ற நிலக்கு வந்துள்ளனர் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதற்கு சில நாட்களிற்கு முன்னரே ஐரோப்பிய ஒன்றியம் தனது தடையினை மேலும் பன்னிரண்டு மாதங்களாக நீடித்திருந்தது. முகாபேயின், 'னு கட்சியுடன் தொடர்புடைய நாற்பது ஸ்தாபனங்கள், 200 தொழிலதிபர்களின் மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் கூட்டரசின் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் இல்லை என்றும் கூறியே தடைநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் விமானசேவைக்கு அரச நிதியூட்டல்

இந்திய அரசின் விமான சேவையான எயர் இந்தியாவினை நிதியூட்டல் மூலம் தக்க வைப்பதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளது. அதன் முதல் கட்டமாக 173 மில்லியன் டொலரினை வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட 432 மில்லியன் டொலரில் ஒரு பகுதியாகும். அண்மைக்காலமாக மிகப்பெரும்




இழப்பினை எதிர்கொண்ட இந்திய விமான சேவையினை தூக்கி நிறுத்துவதற்கு முன்வந்த அரசு ஊக்குவிப்புக்களையும், மேலதிக செலவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு முகாமைத்துவம் இணங்கினால் மட்டுமே நிதியூட்டலுக்கு முன்வர முடியும் என்ற முன் நிபந்தனையையும் விதித்திருந்தது. 2009ம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டில் 875 மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் அரசின் நிபந்தனைக்கு இணங்குவதைத் தவிர, மீட்சிக்கு வேறு வழியில்லை என்பதை நடைமுறை ரீதியாக இந்திய விமான சேவை முகாமைத்துவம் உணர்ந்துகொண்டது. மீள் நடவடிக்கைகள் மூலம் இரண்டு வருடங்களில் ஊக்குவிப்பு, மேலதிக செலவீனங்கள் வகையில் 650 மில்லியன் டொலரினால் குறைக்க முடியும் என்றும் முகாமைத்துவம் தெரிவித்திருந்தது. கடந்த ஒக்ரோபர்மாதம் நியூட்டலுக்கான சம்மதத்தினை தெரிவித்த அரசு 1.1 பில்லியன் டொலர் நிதியூட்டலுக்கான சம்மதத்தினை அரசு தெரிவித்திருந்தது. சென்ற யூன்மாதம் தனது 31,500 ஊழியர்களிற்கான ஊதியம் மற்றும் ஊக்குவிப்புக்களை கொடுப்பதற்கு தாமதித்த நிர்வாகத்திற்கு செப்ரெம்பர் மாதம் விமான ஓட்டிகளால் மேற்கொள்ளப்பட்ட 4 நாள் வேலைநிறுத்தம் மேலும் தாக்கத்தினைக்கொடுத்தது.



# நரசிம்மன் பதில்கள்

உங்கள் கேள்விகளை கேட்பதற்கு
**MAISON DES MEDIAS** 22, Rue Perdonnet, 75010 Paris, France
narasimmanpathilkal@gmail.com

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியில்தான் இந்தியா போர்நிறுத்தத்தைக் கோரியதாக சம்பந்தன் தெரிவித்துள்ளாரே?

**என்.ஜெயலிங்கம் – இலண்டன்**

வன்னியில் பேரவலம் இடம்பெற்ற வேளையில் சம்பந்தரும் ஏனையோரும் சென்னையில் இருந்தபோது சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்காத இந்திய அரசு, தமிழரின் இன அழிப்புக்கு சிறீலங்காவிற்கு சகல வகைகளிலும் உதவி செய்தது யாவரும் அறிந்ததே, இப்போது சம்பந்தர் இதை தெரிவித்திருப்பது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலை சம்பந்தரும் ஆமோதித்திருந்துள்ளார் என்பதையே.

தமிழீழத் தேசியக் கொடியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் தான் பிரித்தானியாவில் காவல்துறையினர் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறதே?

**ஆர்.சௌந்தரம் – இலண்டன்**

தமிழீழத் தேசியக் கொடிக்கும், விடுதலைப் புலிகளின் இலட்சினைக்கும் உள்ள வேறுபாடுகளை தெரியாதவர்கள் கூறும் கதை இது. தமிழீழத் தேசியக் கொடி எந்த மாற்றமும் இல்லாது அப்படியே தான் இருக்கின்றது.

நடிகர்களை கூட்டங்களுக்கு வற்புறுத்தி அழைக்கக் கூடாது என நடிகர் அஜித் சொல்லி உள்ளார்? யார் அவரை வற்புறுத்தியது?

**எம்.ரவி – பிரான்ஸ்**

தமிழக முதல்வர் பங்கு பற்றும் நிகழ்வுகளில் திரைப்பட பிரபல்யங்களை அழைப்பது வழக்கமாகிவிட்டது. அவ்விதமே நடிகர் அஜித்தும் அன்பாக (கண்டிப்பாக) அழைக்கப்பட்டுள்ளார். அந்த 'அன்பான அழைப்பை' மேடையில் புலம்பியதால் இன்று நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

யாழ்மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதியாக இருந்த கஜேந்திரன் உட்பட சிலர் இம்முறை அக்கட்சியில் போட்டியிட அனுமதிக்கப்படவில்லையே? ஏன்..?

**பி.ஆதவன் – பிரான்ஸ்**

தமிழீழத் தேசியத்திற்காக குரல் கொடுப்பவர்களை கூட்டமைப்பில் இருந்து தூக்கி எறியுமாறு வந்த உத்தரவிற்கு அமைய, அவ்வாறான தேசிய சிந்தனை கொண்டவர்கள் தூக்கியெறியப்பட்டதாக அறியவருகின்றது. சிறீலங்காவின் அடக்குமுறையான காலத்திலும் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது சிறீலங்கா அரசால் கைது செய்யப்பட்டு பல இன்னல்களை அனுபவித்தவர் கஜேந்திரன். மாணவர்களின் போராட்டம்தான் அவரை விடுவித்தது. அவ்வாறுதான் தனது சகோதரை பலிகொடுத்தும் தமிழ்த் தேசியத்திற்காக தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்தவர் ஜெயானந்தமூர்த்தி, தனது தந்தையை இனவாதத்திற்கு பலிகொடுத்தும் தமிழ்த் தேசியத்தில் உறுதியாக நிற்பவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இவ்வாறானவர்கள்தான் தூக்கியெறியப்பட்டுள்ளனர் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதோடு, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திரு செல்வாராஜா கஜேந்திரன் யாழ்மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகாவுடன் இணைந்து ஐ.தே.கட்சி தேர்தலில் போட்டியிடவில்லையே?

**ச.சிறீதரன் – இலண்டன்**

சிறீலங்கா அதிபர் தேர்தல் முடிந்த வேளையில் ரணில் விக்கிரமசிங்காவை இந்தியா அவசரமாக அழைத்திருந்தது. அதன் பின்னரே சரத் கைதும், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து தேர்தலில் போட்டியிடும் என்ற அறிவிப்பும் வெளிவந்ததைக் கவனியுங்கள், விடை கிடைக்கும்.



**யாழ். மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதியாக இருந்த கஜேந்திரன் உட்பட சிலர் இம்முறை அக்கட்சியில் போட்டியிட அனுமதிக்கப் படவில்லையே? ஏன்..?**

சிறீலங்கா சிறையில் அடைக்கப்பட்டு எவ்வித தகவலும் இல்லாமல் இருக்கும் பதினொராயிரம் போராளிகள் குறித்து, புலம்பெயர் நாடுகளிலுள்ள எம்மவர்கள் கவனம் கொள்ளாமல், தேர்தல் நடத்துவது பற்றியே கவனம் செலுத்துகின்றனரே?

**வி.சிவராசா – பிரான்ஸ்**

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள புத்திஜீவிகள் தம்மை தமிழர் பிரதிநிதிகளாக காண்பிக்க முனைவதிலும், தமிழரின் ஒருமைப்பாட்டை சிதைப்பதிலுமே கவனம் செலுத்துகின்றனர். சிறையில் சித்திவதைப்படும் எம் உறவுகளை மீட்பதில் புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ள நாம் ஒருங்கிணைந்து எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும். இல்லாது போனால் அவர்களின் வாழ்க்கை நிரந்தரச் சிறையாக மாறிவிடும் என்பது திண்ணம்.